# திராவிடத்தால் வாழ்கிறோம்

1111

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

158

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...





# கொருக்குப்பேட்டை – மணலி சாலை மேம்பாலம்!

## நீடித்த கோரிக்கை... நிறைவேற்றிய அரசு!




மக்களின் அன்றாடத் தேவைகள், நீண்டகால கோரிக்கைகள் என அனைத்தையும் பகுத்துப் பார்த்து, அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதுதான் நல் அரசுக்கான அடையாளம். அந்த வகையில், அன்றாடத் தேவைகளுக்கு ஏற்ப சமூகநலத் திட்டங்களைத் தீட்டுவதில் முன்னோடியாகத் திகழும் திராவிடமாடல் அரசு, மக்களின் நீண்ட கால கோரிக்கைகளிலும் கவனம் செலுத்தி, அவற்றைச் சரிசெய்து வருகிறது. அப்படி உருவாக்கப்பட்ட உள் கட்டமைப்புகளில் ஒன்றுதான், பெருநகர சென்னை மாநகராட்சியின் தண்டையார் பேட்டை மண்டலத்தில் கொருக்குப்பேட்டை - மணலி மேம்பாலம்.

கொருக்குப்பேட்டை, மணலி சாலை மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள இரயில்வே 2-பி மற்றும் 2-ஏ சந்திக் கடவுகள் வழியாக தினமும் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் செல்கின்றன. தவிர, சுற்று வட்டாரப் பகுதிகளான எழில் நகர், எம்.ஜி.ஆர்.நகர், நேரு நகர், கார்னேசன் நகர், அஜீஸ் நகர், கருமாரியம்மன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள லட்சக்கணக்கான மக்களும் மிட்டது நம் அரசு. அதன்மூலம் பொதுமக்களின் சிரமத்தைக் குறைப்பது மட்டுமல்ல, பணிகளுக்குச் செல்வோரின் நேரம், மணிக்கணக்காகக் காத்திருக்கும் வாகனங்களின் எரிபொருள் என அனைத்துக்கும் தீர்வளிக்கும் வகையில் மணலி சாலை மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலை மேம்பாலங்கள் அமைக்க திட்டமிட்டது அரசு.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் 2022-23ஆம்

> மக்களின் இன்றைய தேவைகளை மட்டுமல்ல; நாளைய எதிர்பார்ப்புகளுக்கும் சேர்த்து கவனம் செலுத்தும் அரசு, அனைத்து மாநிலங்களுக்கும் மாடலாக மாறுவதில் வியப்பில்லை.

இந்த வழியை அன்றாட அலுவல்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால், இந்த வழியில் ரயில் போக்கு வரத்துக்கு ஒரு நாளில் 20 முறைக்கு மேல் போக்குவரத்து நிறுத்தம் செய்யப்படுகிறது. இதனால் இந்த இரண்டு சந்திக் கடவுகளையும் கனரக வாகனங்களும் பொதுமக்களும் கடப்பதற்கு நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை நீடித்து வந்தது. ஆம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்கள்கூட அவசரத்துக்குச் செல்ல முடியாத நிலையில், இந்த இடத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது. இந்த நிலையில், கடந்த 10 ஆண்டுகளில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்த நிலையில், 2015-ஆம் ஆண்டில் அப்போதைய ஆட்சியில் மேம்பாலம் அமைக்கப்படும் என அறிவித்ததுடன், அதைக் கிடப்பில் போட்டனர்.

இந்த நிலையில், திராவிட மாடல் அரசு அமைந்ததும், அப்பகுதி மக்களின் 40 ஆண்டு கால கோரிக்கையாகவும் எதிர்பார்ப்பாகவும் இருந்த மேம்பாலம் அமைப்பதற்கு திட்ட ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கொருக்குப்பேட்டை-மணலி சாலையில் 2பி ரயில்வே சந்திக்கடவில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவிப்பினை வெளி யிட்டது அரசு. உடனடியாக அதற்கான நிலம் கையகப்படுத்தல் பணிகளைத் தொடங்கியதுடன் 2023-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அடிக்கல் நாட்டி கட்டுமானப் பணிகளைத் தொடங்கியது. சுமார் 96 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த மேம்பாலத்தைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பிப்ரவரி 12-ஆம் தேதி திறந்து வைத்து, அந்த மேம்பாலத்திலும் பயணம் செய்தார் நம் முதலமைச்சர்.

### புதிய மேம்பாலத்துக்கு அடிக்கல்

இம்மேம்பாலத்தின் நீளம் 840 மீட்டர் (ரயில்வே பகுதி நீளம் 72 மீட்டர் உட்பட), அகலம் 8.40 மீட்டர் மற்றும் மேம்பாலத்தின் இரு மருங்கிலும் சேவை சாலையின் (Service Road) அகலம் 5 மீட்டர் ஆகும். இப்பாலத்தினால் கொடுங்கையூர், கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, எழில் நகர், கண்ணதாசன்



நகர் மற்றும் நேரு நகர் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் போக்குவரத்து நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு ஏற்பட்டுள்ளது. இந்த மேம்பாலத்தைத் திறந்து வைத்ததுடன், இதன் அருகே சுமார் 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதற்கான பணிகளையும் தொடங்கி வைத்தார் முதலமைச்சர்.

இந்த வழித்தடத்தில் எதிர்கால பயன்பாட்டைக் கவனத்தில்கொண்டு கொருக்குப்பேட்டை- எண்ணூர் நெடுஞ்சாலையில் ரயில்வே 2-ஏ சந்திக்கடவில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கவும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

இந்த மேம்பாலம் 448 மீட்டர் நீளம் (இரயில்வே பகுதி நீளம் 39.40 மீ. உட்பட), 11 மீட்டர் அகலம் மற்றும் 5 மீட்டர் அகலமுள்ள நடைபாதையுடன் கூடிய சேவை சாலைகளுடன் (Service Roads) அமைக்கப்பட வுள்ளது. இம்மேம்பாலம் பவர் ஹவுஸ் சந்திப்புக்குப் பிறகு சுமார் 30 மீட்டர் தொலைவில் தொடங்கி IOCL சந்திப்பில் முடிவடைகிறது. இப்பாலப் பணிகள் முடிவுறும் நிலையில் இப்பகுதிகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் எதிர்பார்ப்பையும் திராவிட மாடல் அரசு பூர்த்தி செய்திருக்கும். மக்களின் இன்றைய தேவைகளை மட்டுமல்ல; நாளைய எதிர்பார்ப்புகளுக்கும் சேர்த்து கவனம் செலுத்தும் அரசு, அனைத்து மாநிலங்களுக்கும் மாடலாக மாறுவதில் வியப்பில்லை.

**...சாதனை தொடரும்**

## எகிப்தில், சங்கத்தமிழன் தடம்!

பண்டைய தமிழகத்துக்கும் எகிப்துக்கும் இடையிலான கடல்வழி வணிகத் தொடர்புகளை நிரூபிக்கும் வரலாற்றுச் சான்றுகள் வெளியிடப்பட்டு, தமிழர்களின் தொன்மையான வரலாறு மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் உள்ள 'மன்னர்களின் பள்ளத்தாக்கு' (Valley of the Kings) என்கிற பகுதியில் இருக்கும் கல்லறைகளில் இந்திய மொழிகளில் எழுதப்பட்ட சுமார் 30 எழுத்துப் பொறிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான எழுத்துப் பொறிப்புகள், 'தமிழ் பிராமி எழுத்துகள்' என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சென்னையில் நடந்த தமிழ் கல்வெட்டியல் தொடர்பான பன்னாட்டுக் கருத்தரங்கில், 'லோசான்' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் இங்கோ ஸ்டராச்சும் தூரக் கிழக்கு ஆய்வுகளுக்கான பிரெஞ்சு நிறுவனத்தைச் (French Institute of Far Eastern Studies) சேர்ந்த பேராசிரியர் சார்லட் ஸ்மித்தும் 'மன்னர்களின் பள்ளத்தாக்கிலிருந்து இந்தியா வரை, எகிப்தில் இந்திய எழுத்துப் பொறிப்புகள்' (From the Valley of the Kings to India: Indian Inscriptions in Egypt) என்ற தலைப்பில், இது தொடர்பான தகவல்களை வெளியிட்டனர்.

சங்க காலத் தமிழர்கள் பயன்படுத்திய பானை ஓடுகளில் 'சிகை கொற்றன்', 'சாதன்', 'கீரன்' மற்றும் 'பணைகொற்றன்' போன்ற தூய தமிழ்ப் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதுபோல, மன்னர்களின் பள்ளத்தாக்கிலும் (Valley of the Kings) பொறிக்கப்பட்டுள்ளதை ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சங்க காலத் தமிழர்கள் ஆழ்கடல் பயணங்களில் திறமையாக விளங்கியதையும், உலகளாவிய வணிக வரைபடத்தில் தமிழர்கள் தவிர்க்க முடியாத மையப்புள்ளியாக இருந்ததையும் வரலாற்று ரீதியாக இந்தச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்தத் தகவல்கள் அனைத்தும், தமிழர் வரலாற்றைச் சிதைக்க நினைப்பவர்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டப்பட வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### ராணுவமிடுக்குடன் தலைவருக்கு வரவேற்பு!



கன்னிகை ஜி.ஸ்டாலின்

2005-ஆம் ஆண்டு, கும்மிடிப்பூண்டி தொகுதி செயல்வீரர்கள் கூட்டம், பெரியபாளையம் கிராமத்தில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் அணி சார்பில், 'கழகமே குடும்பம், குடும்பமே கழகம்!' என்கிற முழக்கத்துடன், செங்குன்றம் முதல் பெரியபாளையம் வரை பதாகைகளோடு வரவேற்பு அளித்தோம். எல்லாபுரம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், இளைஞர் அணி தோழர்களோடு இளைஞர் அணி சீருடையுடன் கழகத்தின் இரு வண்ணக் கொடி ஏந்தி ராணுவமிடுக்குடன் பேரணியாக வந்து தலைவருக்கு வரவேற்பு அளித்தேன். மேடையில், தலைவருக்கு மரியாதை செய்ய கிடைத்த வாய்ப்பில் உணர்வுப் பெருக்கோடு இருந்தேன்.

**– கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர்,
மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர்,
கழக அயலக அணி துணைச் செயலாளர்,
திருவள்ளூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மூன்று வகையில் ஆற்றலைப் பெற்ற அண்ணா!

1967-ஆம் ஆண்டு ஏப்ரல் 20-ஆம் தேதி, சென்னை இராயப்பேட்டை உட்லண்ட்ஸ் ஓட்டலில், நீதிக்கட்சியின் சார்பாக, தமிழவேள் பி.டி.இராசன் தலைமையில், பேரறிஞர் அண்ணா மற்றும் கழக அமைச்சரவைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. "நீதிக்கட்சியின் பெருந்தன்மை, சுயமரியாதை இயக்கத்தின் தன்மான உணர்வு, காங்கிரசின் ராஜதந்திரம் என மூன்று வகையிலான ஆற்றலையும் பலனையும் பெற்றவன் என்பதால், மூன்று வேறுபட்ட உணர்ச்சியின் பிரதிநிதியாக நான் செயல்படுவேன்" என உரையாற்றினார் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131